FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(குற்ற வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

U/S 173 of BNSS. C 8167249

1. District : மாவட்டம் தேனி PS: அல். ல. பிரிவு காவல்நிலையம் Year: 2026 ஆண்டு FIR No.: 07/AC/2026 முத.அ. எண் Date: நாள் 25.04.2026

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 as ammended in 2018 and BNSS 2023. Sections பிரிவுகள்: 7, 7A r/w 12
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்: 106
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 17.04.2026 Date to : நாள் வரை 15.00 hrs to
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை 22.30 hrs.

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 25.04.2026 Time : நேரம் 14.00 மணி

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 25.04.2026 Time : நேரம் 15.00 மணி

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினியிலி தட்டச்சு செய்யப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 5 கிமி தூரத்தில்

Beat Number : முறைக் காவல் எண்

(b) Address : முகவரி சார்பதிவாளர் அலுவலகம், மேலக்கோவில், தேனி மாவட்டம்.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Thi.P. கணேச பாண்டியன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் தி.வெங்கலன்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 04.09.1977 (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் —
Place of Issue : வழங்கப்பட்ட இடம் —

(f) Occupation : தொழில் உதவியாளர் (g) Address : முகவரி சார்பதிவாளர் அலுவலகம், தேனி நகர் மனை, தேனி.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
சார்பதிவாளர் மீதும் தனித்தனியே கணக்கு வைத்துள்ளது.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
தாமதமில் லை.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

குணிணியில் குபடக்கு செலியப்பட்ட நனிக்நான்
கிந்தூன் கிணைக்கூ பபு ளொள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Tr. P.K. Jahn rank ..... D.S.P..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

28.02.2026 at 16.00hrs.

Name: பெயர் P. கனிகணை
Rank: நிலை தலைமை காவலர் No. எண்
தூ.கு.கா. பாரு, கரூர்.

Attachment to Column 12 of FIR in Karur V&AC Cr.No.07/AC/2026 u/s 7, 7 r/w 12 of The Prevention of Corruption Act, 1988 as amended in 2018 and 106 of BNSS 2023.

S.No	Name and deatails of the accused
1	Tmt.R.Indumathy, W/o M.N.Satish Kumar, Sub Registrar, West Karur Sub-Registrar office, Karur District.
2.	Tmt.R.Kalpana D/o.Ravi, Data Entry Operator, West Karur Sub-Registrar office, Karur District.
3.	Tmt.S.Monisha D/o.Sooriyamoorthy, No.2/247, Jothi Nagar, Thanneerpalli, Kulithalai Taluk, Karur District.
4.	Tr.M.Shanmugam, S/o Tr.P.Malaikuluthu, D.No.4/84, Kanikalathur, Kaniyalampatti Village, Kadavur Taluk, Karur District.
5.	Tr.T.Kaviyarasan, S/o Tr.A.Tamilarasan, D.No.49, Kathalaipatti, Manavadi Village, Karur Taluk & District.
6.	Tr.S.Arunkumar Selvan, S/o Tr.M.Selvan, D.No.303, Silver lawn, Kathaparai Village, Karur Taluk & District.
7.	Tr.R.Velmurugan, S/o Tr.K.Rangasamy, D.No.236/1, Tharani Nagar, Vennaimalai, Karur Taluk & District.
8.	Tr.K.Chandirasekaran, S/o Tr.P.Kaliyappan, D.No.354A, Mel Pasupathipalayam, Kakkavadi Post, Karur Taluk & District.
9.	Tr.S.Vijayakumar, S/o Tr.A.Subramaniyan, D.No.4/90, ChinnaKulathupatti, Paganatham Village, Karur Taluk & District.
10.	Tr.P.Panneerselvam, S/o Tr.V.Periyasamy, D.No.1/12, Karuppampalayam Village, Manmangalam Taluk, Karur District.
11.	Tr.A.Abibullah, S/o Tr.Abdul Hameed, D.No.491/1, Karupayee Kovil street, Kaur Town, Karur Taluk & District.
12.	Tr.V.Periyasamy, S/o Tr.P.Vellaiyan, D.No.86 C, Vaiyapuri Store, Kaliyappanur West, Thanthonimalai Village, Karur Taluk & District.

(P.Thangaraj)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Karur.

பணிந்து சமர்பிக்கப்படுகிறது:

கரூர் மாவட்டம், மேலக்கரூர் சார்பதிவாளராக பணிபுரியும் திருமதி.இந்துமதி மற்றும் அவரது அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலக பணியாளர்கள் ஆகியோர் பத்திரப்பதிவு மற்றும் ஏனைய பதிவுகளுக்காக அலுவலகத்திற்கு வரும் பொதுமக்களிடம் பத்திர எழுத்தர்கள் மற்றும் ரியல் எஸ்டேட் புரோக்கர்கள் மூலம் லஞ்சமாக பணம் கேட்டு பெற்று வருவதாக நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில் 27.08.2026 ஆம் தேதி 15.00 மணிமுதல் 22.30 மணி வரை நடத்திய திடீர் சோதனையின் அடிப்படையில் திருமதி.P.கலைச்செல்வி, உதவியாளர், தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் அலுவலகம், தாந்தோணிமலை, கரூர் மாவட்டம் என்பவர் 28.08.2026 ஆம் தேதி பிற்பகல் 14.00 மணிக்கு கொடுத்த புகார் மனுவை பெற்று சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை உயர் அதிகாரிகளிடம் தக்க அறிவுரை பெற்ற பின்னர், இன்று 28.08.2026 ஆம் தேதி பிற்பகல் 15.00 மணிக்கு கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.07/AC/2026 பிரிவு 7, 7 r/w 12 of The Prevention of Corruption Act, 1988 as amended in 2018 மற்றும் பிரிவு 106 of BNSS, 2023-ன் கீழ் முதல் தகவல் அறிக்கையில் காலம் 7-ல் கண்ட எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது.

புகார் மனுவின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர்:திருமதி.P.கலைச்செல்வி, உதவியாளர், தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் அலுவலகம், தாந்தோணிமலை, கரூர் மாவட்டம். பெறுநர்:காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கரூர். அய்யா, பொருள் : 27.08.2026-ம் தேதியன்று கரூர் மாவட்டம் மேலக்கரூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் - திடீர் இணை ஆய்வு மேற்கொண்ட போது கைப்பற்றிய பணம் ரூ.1,28,100/- மற்றும் ஆவணத்தை மேல் நடவடிக்கைக்காக ஒப்படைத்தல் - சம்மந்தமாக. பார்வை : திடீர் இணை ஆய்வின் போது தயாரிக்கப்பட்ட செயல்முறை நடவடிக்கைகள், நாள் 27.08.2026. நான் 27.08.2026-ம் தேதியன்று அலுவலகத்தில் பணியில் இருந்த போது தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் அவர்கள் என்னிடம் கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு குழுவினருடன் இணைந்து திடீர் இணை ஆய்வு மேற்கொள்ள அரசு சாட்சி தேவைப்படுவதாகவும் அதற்காக என்னை கரூர் ஊ.த.க. பிரிவு அலுவலகத்துக்கு நேரில் சென்று அறிக்கை செய்யுமாறும் கேட்டுக் கொண்டதன் பேரில், நான் பிற்பகல் 14.30 மணியளவில் கரூர் ஊ.த.க. பிரிவு அலுவலகத்திற்கு நேரில் வந்து அறிக்கை செய்தேன். அப்போது திருமதி.முனியம்மாள், உதவியாளர் (தேர்வு நிலை), மாவட்ட விளையாட்டு அலுவலர் அலுவலகம், கரூர் மாவட்டம் என்பவரும் அதே அலுவலுக்காக வந்து அறிக்கை செய்தார். அப்போது தாங்கள் கரூர் மாவட்டம், கரூர் மேலக்கரூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளராக பணிபுரியும் திருமதி.இந்துமதி மற்றும் அவரது அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலக பணியாளர்கள் பத்திரப்பதிவு மற்றும் ஏனைய பதிவுகளுக்காக அலுவலகத்திற்கு வரும் பொதுமக்களிடம் பத்திர எழுத்தர்கள் மற்றும் ரியல் எஸ்டேட் புரோக்கர்கள் மூலம்

லஞ்சமாக பணம் கேட்டு பெற்று வருவதாக கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் பேரில் மேற்குறிப்பிட்ட மேலக்கரூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொள்ளும்போது அரசுதரப்பு சாட்சியாக உடனிருக்குமாறு சொன்னதன் பேரில் தங்கள் காவல் குழுவினருடன் நானும், மற்றொரு அரசு சாட்சியும் பிற்பகல் சுமார் 14.30 மணிக்கு நிலையம் விட்டு புறப்பட்டு சுமார் 15.00 மணிக்கு கரூர் டவுன் பழைய அரசு மருத்துவனை ரோட்டில் உள்ள மேலக்கரூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்க்கு வந்தபோது, அலுவலக நுழைவாயிலுக்கு முன்புறமும், அலுவலக ஹாலிலும் பத்திரபதிவிற்காக பொதுமக்கள் நின்றுகொண்டிருந்தனர். அலுவலகத்தில் பணியாளர்கள் அவரவர் இருக்கையில் இருந்தார்கள். காவல் ஆய்வாளர் என்னையும், என்னுடன் இருந்த மற்றொரு அரசு சாட்சி மற்றும் காவல் குழுவினரை அறிமுகம் செய்து கொண்டு அலுவலகத்திலிருந்த சார்பதிவாளர் திருமதி.இந்துமதி மற்றும் அலுவலக பணியாளர்களிடம் தொடர்ந்து அவர்களது பணிகளை கவனிக்கும்படி கேட்டுக்கொண்டதன் பேரில் அவர்கள் தொடர்ந்து அலுவலக பணிகளை கவனித்து கொண்டிருந்தனர். பிற்பகல் 15.00 மணிக்கு திடீர் சோதனை தொடங்கப்பட்டது. மேற்படி அலுவலகமானது கிழக்கு பார்த்தவாறு உள்ள தரைத்தளத்துடன் கூடிய கட்டிடம் ஆகும். அதில் கிழக்கு பார்த்த காம்பவுண்ட் சுற்று சுவர் மற்றும் இரும்பு கேட்டுடன் கூடிய நுழைவாயில் வழியாக உள்ளே நுழைந்ததும் ஒரு பெரிய ஹால் உள்ளது. அந்த ஹாலில் தென்கிழக்கு மூலையில் வடக்கு பார்த்தவாறு சார்பதிவாளர் திருமதி.இந்துமதி அவர்களின் இருக்கையும், அவரது இருக்கைக்கு முன்பு டேட்டா என்ட்ரி ஆபரேட்டர் திருமதி.சத்யா மற்றும் திருமதி.கல்பனா ஆகியோர்களின் இருக்கையும், அவர்களது இருக்கைக்கு வடக்கு பக்கம் திரு.சுபாஷ், இளநிலை உதவியாளர் என்பவரது இருக்கையும், மேற்படி ஹாலின் மேற்கு சுவரோரம் பார்வையாளர்கள் அமரக்கூடிய இருக்கையும், அதனருகே வடமேற்கு மூலையில் கேமிரா ஆபரேட்டர் திரு.திலீபன் என்பவரது இருக்கையும், அவரது இருக்கைக்கு முன்பு அலுவலக உதவியாளர் இருக்கையும் உள்ளது. மேற்படி ஹாலின் தென்மேற்கு நுழைவாயில் வழியாக சென்றதும், கிழக்கு பக்கம் கணினி அறையும், மேற்கு பக்கம் உள்ள அலுவலக ஹாலில் வடக்கு பார்த்தவாறு திரு.பிரியதர்ஷினி, இளநிலை உதவியாளர், திருமதி.அனிதா, திருமதி.வசந்தி, உதவியாளர்கள் ஆகியோர்களது இருக்கையும் உள்ளது. மேற்படி ஹாலின் வடமேற்கு நுழைவாயில் வழியாக சென்றதும் வலது பக்கம் மேற்கு பார்த்தவாறு இரண்டு பதிவறைகளும், இடது பக்கம் கிழக்கு பார்த்தவாறு இரண்டு கழிவறைகளும், ஹாலின் தெற்கு பக்கம் பதிவறையும் உள்ளது. இந்த சோதனையின் போது, சார்பதிவாளர் மற்றும் அலுவலக பணியாளர்களை சோதனை செய்ததில், கீழ்கண்டவாறு தொகைகள் காணப்பட்டது. அலுவலகத்திலிருந்த தனிநபர் தனிஉறையில் வைக்கப்படும் பதிவேட்டை சார்பதிவாளர் மூலம்

பெற்று 27.08.2026 அன்று காலை அலுவலகப் பணியாளர்கள் அலுவலகம் வந்தபோது அவர்கள் வைத்திருந்த தொகைகளை கீழ்கண்டவாறு பதிவு செய்திருந்தது தெரியவந்தது.

வ. எண்	பெயர்/பதவி	காணப்பட்ட தொகை (ரூபாய்)	தனிநபர் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்ட தொகை
1.	திருமதி.R.இந்துமதி, சார்பதிவாளர்,	ரூ.1650/-	ரூ.1770/-
2.	திருமதி.K.அனிதா, உதவியாளர்,	ரூ.240/-	ரூ.240/-
3.	திருமதி.A.வசந்தி, உதவியாளர்,	ரூ.451/-	ரூ.451/-
4.	திரு.S.சுபாஷ், இளநிலை உதவியாளர்	ரூ.120/-	ரூ.120/-
5.	திருமதி.P.பிரியதர்ஷினி, இளநிலை உதவியாளர்,	ரூ.40/-	ரூ.90/-
6.	திருமதி.A.சத்யா, டேட்டா என்ட்ரி ஆபரேட்டர்,	ரூ.120/-	ரூ.195/-
7.	திருமதி.M.கல்பனா, டேட்டா என்ட்ரி ஆபரேட்டர்	ரூ.260/-	ரூ.260/-
8.	திரு.A.திலீபன், கேமரா ஆபரேட்டர்,	ரூ.300/-	ரூ.300/-
9.	திருமதி.S.மோனிஷா, ஈ.சி. எழுத்தர்	ரூ.100/-	-

மேற்படி வரிசை எண்.1 முதல் 9 வரை உள்ள தொகைகள் அவர்களின் சொந்த தொகை என்றும், அந்த தொகைகள் குறைவானதாகவும், அவர்கள் இன்று காலை அலுவலகம் வந்த போது கொண்டு வந்த தொகையை தனிநபர் தனிஉறையில் வைக்கப்படும் பதிவேட்டில் பதிவு செய்த இருந்த தொகையுடன் ஒத்துபோனதாலும், குறைவான தொகை வைத்திருந்த வ.எண்.1, 5, 6-ல் குறிப்பிட்டுள்ள பணியாளர்கள் மதிய உணவிற்கு செலவு செய்துவிட்டது பற்றி சொன்ன அவர்களின் விளக்கம் ஏற்றுகொள்ளதக்க வகையிலும் இருந்ததால் மேற்படி தொகைகளை அவர்கள் வசமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. பக்கம் 1 முதல் 82 வரையுள்ள தனிநபர் தனிஉறையில் வைக்கப்படும் பதிவேட்டை அரசு சாட்சிகள் முன்னிலையில் விசாரணைக்காக கைப்பற்றினேன். மேலும் வரிசை எண்.9-ல் உள்ள திருமதி.மோனிஷா என்ற தனிநபரிடம் விசாரித்தபோது அவர் ஏற்கனவே கிருஷ்ணராயபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் கேமரா ஆபரேட்டராக பணிபுரிந்து வந்ததாகவும், தனக்கு திருமணமாகி விட்டதால் வேலையை விட்டு நின்றுவிட்டதாகவும், தற்போது கடந்த ஜனவரி 2026 முதல் மேலக்கரூர் சார்பதிவாளர் (பொறுப்பு) திருமதி.மதுமதி அவர்கள் கேட்டுக்கொண்தன்பேரில் அவருக்கு தான் அலுவலக வேலைகளில் உதவியாக இருந்து வந்ததாகவும், அதனால் அவர் தனக்கு வேலைக்கு வந்த நாட்களுக்கு தினந்தோறும் ரூ.500/- ஊதியமாக கொடுத்து வந்தார் எனவும், அவர்

பணிமாறுதலில் சென்ற பிறகு புதிதாக வந்த சார்பதிவாளர் திருமதி.இந்துமதி அவர்களும் தன்னை அவரது அலுவலக வேலைக்கு வைத்துக்கொண்டதாகவும் அவரும் தனக்கு வேலைக்கு வந்த நாட்களுக்கு தினந்தோறும் ஊதியமாக ரூ.500/- கொடுத்து வந்தார் எனவும் தெரிவித்தார். மேலும் அவரது செல்போன் எண்.9344764078-ல் உள்ள ஜி-பே பணப்பரிவர்த்தனையை ஆய்வு செய்தபோது அவர் 19.01.2025 முதல் 27.08.2026 வரை மொத்தம் ரூ.2,19,949/- பெறப்பட்டுள்ளது தெரியவந்தது. இந்த தொகையை பற்றி அவர்களிடம் விளக்கம் கேட்டபோது அவர் முன்னுக்கு பின முரணாக பதில் தெரிவித்தார். மேலும் வரிசை எண்-7ல் உள்ள திருமதி.M.கல்பனா, டேட்டா என்ட்ரி ஆபரேட்டர் அவர்களின் செல்போன் எண்.9566994825-ல் உள்ள ஜி-பே பணப்பரிவர்த்தனையை ஆய்வு செய்தபோது அவர் 08.12.2024 முதல் 27.08.2026 வரை மொத்தம் ரூ9,93,112/- பெறப்பட்டுள்ளது தெரியவந்தது. இந்த தொகையை பற்றி அவர்களிடம் விளக்கம் கேட்டபோது அவர் முன்னுக்கு பின முரணாக பதில் தெரிவித்தார். இந்த திடீர் சோதனையின் போது, மேற்கண்ட அனைத்து அறைகளும் சோதனை செய்யப்பட்டது. மேலும் அலுவலகத்தில் இருந்த கீழ்க்கண்ட தனி நபர்களை சோதனை செய்ததில், அவர்களிடம் கீழ்கண்டவாறு தொகைகள் காணப்பட்டது.

வ. எண்	பெயர் மற்றும் முகவரி	காணப்பட்ட தொகை (ரூ)	அவர்களது விளக்கம்
1.	திரு.சண்முகம், வயது.48/26, த/பெ.மலைக்கொளுந்து காணிகளத்தூர், கரூர் மாவட்டம்.	ரூ.40,000/- (80x500)	தான் தாந்தோன்றிமலையில் தனது மகன் திரு.கவின் குமார் பெயரில் வாங்கிய 1882 சதுரடி மனைநிலத்தை பத்திர எழுத்தர் திரு.செங்கோட்டையன் என்பவர் மூலம் பத்திரம் தயார் செய்ததாகவும், அப்போது அவர் ரூ.40,000/- சார்பதிவாளர் அலுவலகத்திற்கு செலவாகும் என்றும் அந்த பணத்தை எடுத்து வரும்படி சொன்னதால் தான் இன்று பணத்துடன் பத்திர பதிவிற்காக வந்ததாகவும், அவர் மேலக்கரூர் சார்பதிவக அலுவலகம் சென்று காத்திருக்கும்படியும் தான் சிறிது நேரத்தில் வருவதாக சொன்னதன்பேரில் தான் இங்கு வந்து காத்திருந்ததாகவும் தான் வைத்திருந்த பணம் சார்பதிவாளர் மற்றும் அவரது அலுவலக செலவிற்காக கொண்டு வந்ததாக சொன்னார்.

2.	திரு.T.கவியரசன், வயது.31/26, த/பெ.தமிழரசன், கத்தாளபட்டி, மணவாடி கிராமம், கரூர் மாவட்டம்.	ரூ.23,500/- (47x500)	தான் வழக்கறிஞர் திரு.சரவனேஷ் என்பவரிடம் இரண்டு வருடமாக பத்திரபதிவு உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும், பத்திரபதிவு சம்மந்தமாக தான் மேலக்கரூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்து பத்திரபதிவு சம்மந்தப்பட்ட அனைத்து வேலைகளையும் முடித்து கொடுப்பதாகவும் இன்று திரு.ரவிச்சந்திரன் என்பவர் பெயரில் வழக்கறிஞர் திரு.சரவனேஷ் தயார் செய்து கொடுத்த MOD ஆவணத்தை பதிவு செய்வதற்காக இன்று அலுவலகம் வந்ததாகவும் தான் வைத்திருந்த தொகை ரூ.23,500/- சார்பதிவாளர மற்றும் அலுவலக செலவிற்கு கொடுப்பதற்காக கொண்டு வந்த தொகை என்றும் சொன்னார்.
3.	திரு.S.அருண்குமார் செல்வன், வயது.41/26, த/பெ.செல்வன், எண்.303, சில்வர் லேன், காதப்பாறை, கரூர் மாவட்டம்.	ரூ.17,000/- (34x500)	தான் கரூர் தாளப்பட்டி டெக்ஸ்டைல்ஸ் பார்க் பின்புறம் வாங்கிய 2.5 ஏக்கர் நிலத்தை பத்திர எழுத்தர் திரு.சஞ்சீவி என்பவர் மூலம் பத்திரம் தயார் செய்த போது அவர் ரூ.17,000/- சார்பதிவாளர் அலுவலகத்திற்கு செலவாகும் என்றும் அந்த பணத்தை எடுத்து வரும்படி சொன்னதால் தான் இன்று பணத்துடன் பத்திர பதிவிற்காக அவருடன் இங்கு வந்து காத்திருந்ததாகவும் தான் வைத்திருந்த பணம் சார்பதிவாளர் மற்றும் அவரது அலுவலக செலவிற்கு கொடுப்பதற்கு கொண்டுவந்த பணம் என்று சொன்னார்.
4.	திரு.R.வேல்முருகன், வயது.56/26, த/பெ.ரெங்கசாமி, சத்தியமூர்த்தி நகர், கரூர் மாவட்டம்.	ரூ.14,000/- (28x500)	தான் தனது பெயரில் குபரேன் நகரில் இருந்த 2400 சதுரடி வீதம் இரண்டு மனைநிலத்தை கடந்த 2018 ஆம் ஆண்டு திரு.வீரமலை என்பவரிடம் அடமானம் வைத்து கடன் வாங்கியதாகவும், அதில் ஒரு மனைநிலத்தை மட்டும் மீட்பதற்கு அடமானம் ரத்து செய்ய இன்று இங்கு வந்ததாகவும் தான் வைத்திருந்த ரூ.14,000/- சார்பதிவாளர் மற்றும் அவரது அலுவலக செலவிற்கு கொடுப்பதற்கு கொண்டுவந்ததாக சொன்னார்.

5.	திரு.K.சந்திரசேகரன், வயது.50/26, த/பெ.காளியப்பன், காக்காவாடி மேல் பசுபதிபாயையம், கரூர் மாவட்டம்.	ரூ.9,000/- (18x500)	தான் நிலபுரோக்கர் தொழில் செய்து வருவதாகவும் இன்று ராயனூரைச் சேர்ந்த திருமதி.சௌமியா என்பவரது பெயரில் தாளப்பட்டி கிராமம் பாரதி நகரில் உள்ள 4800 சதுரடி மனைநிலத்தை கிரயம் செய்வதற்காக பத்திர எழுத்தர் திரு.செந்தில் குமார் என்பவர் மூலம் தயார் செய்துகொண்டு அலுவலகம் வந்ததாகவும், தான் வைத்திருந்த ரூ.9,000/- சார்பதிவாளர் மற்றும் அவரது அலுவலக செலவிற்கு கொடுப்பதற்கு கொண்டுவந்ததாக சொன்னார்.
6.	திரு.S.விஜயகுமார், வயது.37/26, த/பெ.சுப்பிரமணியன், 4/90, சின்ன குளத்துப்பட்டி, காகநத்தம் அஞ்சல், கரூர் மாவட்டம்.	ரூ.7,500/- (14x500) (1x200) (3x100)	தான் கோவை ரோட்டில் உள்ள ஸ்ரீ பாலாஜி எண்டர்பிரைசஸ் என்ற நிதிநிறுவனத்தில் பணிபுரிந்து வருவதாகவும், தான் பணிபுரியும் நிதி நிறுவனத்தின் பங்குதாரர் திரு.மணி என்பவர் அவரது பெயரில் பாலாஜி பாரடைஸ் சிட்டி என்ற இடத்தில் உள்ள 3500 சதுரடி மனை நிலத்தை தஞ்சாவூரைச்சார்ந்த திருமதி.சுமதி என்பவருக்கு விற்பதற்காக அவர் கேட்டுக்கொண்டதன் பேரில் மேற்படி திரு.மணி அறிவுரைப்படி தானே பத்திர எழுத்தர் திரு.செங்கோட்டையன் என்பவர் மூலம் பத்திரம் தயார் செய்தபோது அவர் சார்பதிவாளர் அலுவலக செலவிற்கு ரூ.7,000/- செலவாகும் என்று திருமதி.சுமதியிடம் சொன்னதன் பேரில் திருமதி.சுமதி கொடுத்த பணத்துடன் இன்று பத்திரபதிவிற்காக அலுவலத்திற்கு வந்ததகாவும், திருமதி.சுமதி அலுவலகத்திற்கு வெளியே காத்திருந்ததாகவும் தான் வைத்திருந்த தொகை சார்பதிவாளருக்கும், அவரது அலுவலக செலவிற்கு கொடுப்பதற்கு கொண்டுவந்ததாக சொன்னார்.

7.	திரு.P.பன்னீர் செல்வம், வயது.28/26, த/பெ.பெரியசாமி, 1/12, கருப்பம்பாளையம், சுக்காலியூர் அஞ்சல், கரூர் மாவட்டம்.	ரூ.7,000/- (12x500) (4x200) (2x100)	தான் ஈஸ்வரன் கோயில் அருகில் உள்ள நாவல் டாக்குமெண்டேசன் அலுவலகத்தில் பணிபுரிந்து வருவதாகவும், இன்று தான் பொள்ளாச்சியை சார்ந்த திருமதி.அனிதா என்பவரது மனைநிலத்தை திருமதி.வசந்தி என்பவருக்கு கிரயம் செய்வதற்காக எங்களது அலுவலகத்தில் தயார் செய்த பத்திரத்தை பதிவு செய்வதற்காக இன்று மேலக்கரூர் சார்பதிவாளர் அலுவலகம் வந்ததாகவும் தான் வைத்திருந்த தொகை ரூ.7,000/- சார்பதிவாளருக்கும், அவரது அலுவலக செலவிற்கு கொண்டுவந்ததாக சொன்னார்.
8.	திரு.A.ஹபீபுல்லா, வயது.60/26, த/பெ.அப்துல் ஹமீது, 491/1, கருப்பாயி கோயில் தெரு, கரூர் டவுன், கரூர் மாவட்டம்.	ரூ.6,900/- (12x500 2x200 4x100 2x50)	தான் மேலக்கரூர் சார்பதிவாளர் அலுவலகம் அருகே சன்னதி தெருவில் தனது பெயரில் ஆவணம் எழுதிக்கொடுக்கும் வேலையை செய்து வருவதாகவும், இன்று இனாம் கரூரிலுள்ள 1735 சதுரடி மனைநிலத்தை திருமதி.அமராவதி என்பவர் பெயரில் கிரயம் செய்வதற்காக பத்திரம் தயார் செய்து கொண்டு பதிவு செய்வதற்கு இங்கு அலுவலகம் வந்ததாகவும், திருமதி.அமராவதி அலுவலகத்திற்கு வெளியே காத்திருந்ததாகவும் தான் வைத்திருந்த தொகை ரூ.6,900/- சார்பதிவாளருக்கும், அவரது அலுவலக செலவிற்காகவும் கொண்டுவந்ததாகவும் சொன்னார்.
9.	திரு.V.பெரியசாமி, வயது.46/26, த/பெ.வெள்ளையன், 86-சி, வையாபுரி ஸ்டோர், காளியப்பனூர் மேற்கு, தாந்தோணிமலை கரூர் மாவட்டம்.	ரூ.3,000/- (6x500)	தான் மேலக்கரூர் பத்திர பதிவு அலுவலகத்தில் கிரய பத்திரம் பதிவு செய்யவரும் பொதுமக்களுக்கு உடனிருந்து சார்பதிவாளர் அலுவலகத்தில் தனக்கு தெரிந்த நபர்கள் மூலம் பத்திரபதிவு செய்து கொடுத்தும், தேவைப்படும் போது சாட்சி கையெழுத்து போடுவதாகவும், தான் வைத்திருந்த தொகை ரூ.3,000/- சார்பதிவாளர் அலுவலக செலவிற்காக கொண்டுவந்ததாக சொன்னார்.

மேற்படி வரிசை எண்.1 முதல் 9 வரை உள்ள நபர்கள் ஆவண எழுத்தர், ஆவண எழுத்தர் அலுவலகத்தில் வேலை செய்து வரும் புரோக்கர்கள் என்றும் பத்திர பதிவிற்காக சார் பதிவாளர் அலுவலகம் வந்ததாகவும் அவர்கள் அலுவலக செலவிற்காக கொண்டுவந்த தொகை என்றும், முன்னுக்குபின் முரணாக தெரிவித்ததால் மேற்டி தொகைகள் ரூ.1,27,900/-

விசாரணைக்காக கைப்பற்றினேன். மேலும், கணினி அறையில் சோதனை செய்தபோது அந்த அறையின் மேற்கு பக்கம் இருந்த சிமெண்ட் செல்பில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஆவணங்களுக்கு இடையே திரு.K.பாலசுப்பிரமணியம், வழக்கறிஞர், பாகம் 2875/1959 மட்டும் 26.06.1959 என்று கருப்பு மையினால் எழுதப்பட்டு சொத்து விபரம் என்று கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட சிறிய துண்டு சீட்டின் உள்ளே ரூபாய் 200 வைத்து மடித்து வைக்கப்பட்டிருந்ததை துண்டு சீட்டுடன் கணக்கில் வராத தொகை ரூ.200/- விசாரணைக்காக கைப்பற்றினேன்.

மேலும், அலுவலக பணியாளர்கள் மற்றும் தற்காலிக பணியாளர்கள் வருகை பதிவேட்டை உதவியாளர் திருமதி.அனிதா என்பவர் மூலம் எடுத்து வரச்செய்து பார்வையிட்டபோது அதில் இன்று 27.08.2026 அலுவலகத்தில் ஆஜரானதற்கு மேற்படி 8 அலுவலர்களும் வருகைப்பதிவேட்டில் சுருக்கொப்பம் செய்திருந்தார்கள். மேற்படி அலுவலக பணியாளர்கள் வருகைப் பதிவேடு பக்கம் 1 முதல் 26 மற்றும் தற்காலிக பணியாளர்கள் பதிவேடு பக்கம் 1 முதல் 28 வரை உள்ளதை காவல் ஆய்வாளரால் விசாரணைக்காக கைப்பற்றினேன். மேலும் மேலக்கரூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களில் சம்மந்தப்பட்ட ஆவண உரிமைதாரர்களுக்கு திருப்பி வழங்காமல் நிலுவையிலுள்ள ஆவணங்களைப்பற்றி சார்பதிவாளர் அவர்களிடம் விசாரித்தபோது அவர் நிலுவையிலிருந்த ஆவணங்கள் 1) 173/2026, 2) 276/2026, 3) 297/2026, 4) 300/2026, 5) 301/2026, 6) 309/2026, 7) 316/2026, 8)317/2026, 9) 319/2026, 10) 321/2026, 11) 322/2026, 12) 325/2026, 13) 329/2026, 14) 330/2026, 15) 332/2026, 16) 333/2026 மற்றும் 17) 339/2026 ஆகிய பதினேழு ஆவணங்களை ஆஜர் செய்தார். இந்த ஆவணங்களைப்பற்றி அவரிடம் விளக்கம் கேட்டபோது அவர் மற்ற சார்பதிவாளர் அலுவலகங்களிலிருந்து மதிப்பறிக்கை பெற வேண்டியுள்ளதாலும் மற்றும் வட்டாட்சியர் அலுவலகத்தில் உண்மைதன்மை சரிபார்ப்பிற்காகவும் நிலுவையிலுள்ளதாக தெரிவித்தார். அதனால், அந்த ஆவணங்களை மேல்நடவடிக்கைக்காக சார்பதிவாளரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேற்படி 17 நிலுவை ஆவணங்களின் சான்றொப்பமிட்ட 26.08.2026 வரையிலான பட்டியல் அரசு சாட்சிகள் முன்னிலையில் காவல் ஆய்வாளரால் விசாரணைக்காக கைப்பற்றினேன். இந்த நடவடிக்கையின் போது சார்பதிவாளர் மற்றும் தனி நபர்களை விசாரித்து வாக்குமூலம் தனித்தனியாக பெறப்பட்டது. மேலும் 27.08.2026-ம் தேதி பதிவு செய்யப்பட்ட ஆவணங்களைப்பற்றி சார்பதிவாளரிடம் விசாரித்தபோது அவர் நில விற்பனை 59 ஆவணங்களும், அதில் 5 ஆவணங்கள் நிலுவையில் உள்ளதாகவும், நில உரிமை ஒப்படைப்பு ஆவணங்கள் 15 ம், செட்டில்மெண்ட் 5 ஆவணங்களும், செல்ரசீது 3 ஆவணங்களும். பிழைதிருத்தல் 1 ஆவணமும், ஒரு ரத்து ஆவணமும், ஒரு பாகப்பிரிவினை ஆவணமும், 3 உயில் ஆவணங்களும் மற்றும் ஒரு உயில் இரத்து ஆவணமும் ஆக மொத்தம் 89 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டதாகவும் அதன்மூலம் மொத்தம் ரூ.79,34,618/-ம், வில்லங்க சான்று மற்றும் ஆவண சான்றிட்ட நகல்களுக்காக மொத்தம் ரூ.20,088/-ம், திருமணப்பதிவுக்காக ரூ.120/-ம் ஆன்லைன் மூலம் வசூல் செய்யப்பட்டதாக தெரிவித்து அலுவலக இணையதளம் *2.0 மூலம்

கணினியிலிருந்து பிரிண்ட் எடுத்து சான்றொப்பம் செய்து கொடுத்ததை மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றினேன். இந்த திடீர் சோதனை நடவடிக்கை, அலுவலக ஆவணங்களுக்கோ, அலுவலர்களுக்கோ எந்தவித சேதாரமும், தொந்தரவுமின்றி நடத்தி முடிக்கப்பட்டதை சாட்சிகள் முன்பு உறுதி செய்து கொள்ளப்பட்டது. இந்த நடவடிக்கை கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து எடுத்துவரப்பட்ட மடிக்கணினி மூலம் காவல் ஆய்வாளர் அவர்கள் சொல்லச் சொல்ல பிற்பகல் சுமார் 15.00 மணி முதல் இரவு 10.30 மணி வரை தலைமை காவலர் 303 திரு.K.ஷபி அஹமத் அவர்களால் மேலக்கரூர் சார்பதிவக அலுவலக ஹாலில் வைத்து தட்டச்சு செய்து முடிக்கப்பட்டது. அதில் நானும், மற்றொரு அரசு சாட்சியும், சார்பதிவாளர், காவல் ஆய்வாளர்கள் திரு.சாமிநாதன் மற்றும் செல்வி.P.தங்கமணி ஆகியோர்கள் பக்கத்திற்கு பக்கமும், தனிநபர்கள் திரு.சண்முகம், திரு.கவியரசன், திரு.அருண்குமார் செல்வன், திரு.வேல்முருகன், திரு.சந்திரசேகரன், திரு.விஜயகுமார், திரு.பன்னீர்செல்வம், திரு.ஹபீபுல்லா, திரு.பெரியசாமி, திருமதி.மோனிஷா, டேட்டா என்ட்ரி ஆபரேட்டர் திருமதி.கல்பனா மற்றும் உதவியாளர் திருமதி.அனிதா ஆகியோர்கள் கடைசி பக்கத்திலும் கையொப்பம் செய்தோம். மேற்படி திடீர் இணை ஆய்வின் போது கைப்பற்றப்பட்ட மொத்த பணம் ரூ.1,28,100/- மற்றும் கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து தங்களிடம் ஒப்படைக்கின்றேன். உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, தங்கள் உண்மையுள்ள Sd/- XXXXXXXXXX திருமதி.P.கலைச்செல்வி, உதவியாளர், தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் அலுவலகம், தாந்தோணிமலை, கரூர் மாவட்டம். நாள்.28/08/2026.

Sir, Received the Computer typed complaint on 28.08.2026 at about 14.00 hrs, after getting suitable instructions form the superior officers of DVAC, Chennai, I am registering a case in Karur Vigilance and Anti-Corruption Cr.07/AC/2026 u/s 7, 7 r/w 12 of The Prevention of Corruption Act, 1988 as amended in 2018 and u/s 106 of BNSS 2023 at 15.00 hrs on 28.08.2026. Sd/- (XXXXXXXXXX) 28.08.2026 P.Thangamani, Inspector of Police, V & AC, Karur.

Original FIR along with the original computer typed complaint of Tmt.P.Kalaiselvi, Assistant, O/o the Deputy Director of Horticulture, Thanthonimalai, Karur District are submitted to the Hon'ble Principal District and Sessions Judge / Special Court, Karur and a copy of FIR will be submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

(P.Thangamani)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Karur.